23

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண்.72/மா/2021
நாள். 03 .12. 2021

திரு.ஆர்.வெங்கட்டராமன்,
சென்னை – 600 078. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
உதவி செயற்பொறியாளர் – எதிர்மனுதாரர்கள்
கோட்டம் 28/137,
பெருநகர சென்னை மாநகராட்சி

பெருநகர சென்னை மாநகராட்சி, ஜெய் பாலாஜி நகர், ஆர்.வி.ஆர்.ஹவுஸ், எண்.1,2 மற்றும் 3, திருமலை தெருவில் வசிக்கும் திரு ஆர்.வெங்கட்டராமன் அவர்களின் 04.09.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 72/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஜெய் பாலாஜி நகர், ஆர்.வி.ஆர்.ஹவுஸ், எண்.1,2 மற்றும் 3, திருமலை தெருவில் வசிக்கும் திரு ஆர்.வெங்கட்டராமன் என்பவர் தனது முறையீட்டு மனுவில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

" I. I am a senior citizen residing at the above address, within the limits of the Greater Chennai Corporation in Zone 10 in division 137 and filing this complaint against the Abuse of Authority by the following public Servants:

1. The Assistant Commissioner of Zone 10 Greater Chennai Corporation.
2. The Assistant Engineer, Division 137 in Zone 10 of the Greater Chennai Corporation.

II. I submit that the above officers failed to inspect the feasibility for laying the Foot path in the small roads in the inner streets with less than 5 meters width and blindly approved the foot path laying for personnel gains, abusing their authority vested with them and laid the foot path which is not practically useful for pedestrians and at the same time risking human lives to walk under the EB Transformers and Pillars.

III. I submit that the road corners were laid with paver blocks a few years back and the idea of laying the paver blocks are that it can be re-used for several years and the same is in good condition, but for personnel gains the above officers have decided to lay foot path to more than 4 feet and thereby causing hindrances and while there is no space for walking.

IV. I submit even after the representation to consider on the merits of the case, the officers, colluding with contractor are attempting to proceed for the personnel interest and against the interest of the Public life risks at the same time the Government funds are misused as mentioned above and there is a prima facie case to register a complaint and take up for investigation as per law.

Hence I humbly pray that necessary actions may be taken to file a case and I will appear and submit all relevant documents and prove my case in the interest to arrest Corruption and Abuse of Authority and humbly request to pass suitable orders or that may deem fit and proper in the facts and the circumstances of the case and thus render justice.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை 16.02.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.02.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. மனுதாரர் தனது 14.02.2021 அன்று முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிய மின்னஞ்சலில் தான் கொரோனாவால் பாதிக்கப்பட்டு தற்பொழுது குணமடைந்து வீட்டில் தனிமைப்படுத்திக்கொண்டு இருப்பதாக தெரிவித்து மூன்று வார காலத்திற்கு விசாரணையை ஒத்திவைக்குமாறு கோரியுள்ளார். மண்டல அலுவலர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. உதவி செயற்பொறியாளர் கலந்து கொண்டு வாக்குமூலம் அளித்துள்ளார். மாவட்ட வருவாய் அலுவலர் மண்டலம் 10ம், 10.07.2021 அன்று தமது அறிக்கையை அனுப்பியுள்ளார்.

4. 16.02.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜரான மண்டலம் 10ஐ சேர்ந்த உதவி செயற்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் “ மனுதாரர் குறிப்பிட்ட சாலை சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகத்தின் பேருந்துகள் சாலை துறை மூலம் முறையாக அரசு விதிகளின்படி ஒப்பந்தம் கோரப்பட்டு, ஆணையரின் ஒப்புதலுடன் மேற்பார்வை பொறியாளர் பேருந்து சாலைகள் துறை அவர்களால் ஒப்பந்ததாருக்கு பணி ஆணை வழங்கப்பட்ட 14 உட்புறச்சாலைகள் மேம்படுத்தும் பணிகளில் ஒன்றாகும். இப்பணிகளில் மனுதாரர் வசிக்கும் ஜெய்பாலாஜி நகர் பிரதான சாலை நடைபாதை மேம்படுத்தும் பணியும் ஒன்றாகும். மனுதாரர் குறிப்பிட்ட சாலையில் ஏற்கனவே அமைக்கப்பட்ட பழுதடைந்த நடைபாதையை புதிதாக சீரமைக்க வேண்டி அங்கு வசிக்கும் மற்றும் அச்சாலையைப் பயன்படுத்தும் பொதுமக்களின் சார்பாக ஜெய்பாலாஜி நகர் குடியிருப்போர் நலச்சங்கத் தலைவர் திரு சூரியநாராயணன் நடைபாதை அமைக்க வேண்டி மண்டல அலுவலர் 10 அவர்களுக்கும், கோட்ட உதவிப்பொறியாளர், கோட்டம் 137 அவர்களுக்கும் கடிதம் அனுப்பியும், நேரிலும், தொலைபேசி வாயிலாகவும் கேட்டுக்கொண்டதனடிப்படையில் மண்டல அலுவலர் மற்றும் மண்டல செயற்பொறியாளர் அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டு இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

5. மனுதாரர் குறிப்பிட்ட சாலை சுமார் 30 அடி அகலமும் சுமார் 240 மீட்டர் நீளமும் உள்ள சாலையாகும். இச்சாலை பிரதான சாலைகளில் போக்குவரத்து நெருக்கடியான நேரங்களில் கே.கே. நகர், நெசப்பாக்கம், எம். ஜி.ஆர்.நகரிலிருந்து

ராமாபுரம் மற்றும் போரூர் செல்லும் மக்களுக்கு எளிதில் கடக்கக்கூடிய மிகவும் பயனுள்ள சாலையாகும். மனுதாரர் குறிப்பிட்ட சாலையின் தெற்குப் பகுதியில் சுமார் 150 மீட்டர் நீளத்திற்கு ஏற்கனவே பழுதடைந்த நடைபாதையை புதிதாக கான்கிரீட் நடைபாதையாக அமைக்கப்பட்டு இப்பணி உயர் அதிகாரிகளால் கள ஆய்வு செய்யப்பட்டு உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி பணி அத்துடன் முடிக்கப்பட்டது. மனுதாரர் வசிக்கும் சாலையின் வடக்குப் பகுதியில் நடைபாதை அமைக்கப்படவில்லை. மனுதாரர் சென்னை மாநகராட்சி சாலையை ஆக்கிரமித்து கோயில் மற்றும் வேலி அமைத்து சாலையை ஆக்கிரமித்துள்ளார். நடைபாதை அமைத்தால் அதற்கு இடையூறாக இருக்கும் என கருதி மனுதாரர் புகார் அளித்துள்ளார். மனுதாரருக்கு சென்னை பெருநகர மாநகராட்சி சட்ட விதிகளின்படி சாலையை ஆக்கிரமித்ததற்காக Notice under section 220 read with 222 of the C.C.M.C. Act IV of 1919 –ன்படி மத்திய வட்டார இணை ஆணையர் அவர்கள் மூலம் 14.09.2020 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டது. எனவே மனுதாரர் கூறிய புகார்கள் அனைத்தும் உண்மைக்குப்புறம்பானது" என்று தெரிவித்துள்ளார்.

6. மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர், மண்டலம் 10 அவர்கள் தனது 10.07.2021 நாளிட்ட அறிக்கையில் 16.02.2021 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் உதவி செயற்பொறியாளர் ஆஜராகி தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலையின் தெற்குப் பகுதியில் சுமார் 150 மீட்டர் நீளத்திற்கு ஏற்கனவே பழுதடைந்த நடைபாதையை புதிதாக கான்கிரீட் நடைபாதையாக அமைக்கப்பட்டு இப்பணி உயர் அதிகாரிகளால் கள ஆய்வு செய்யப்பட்டு உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி பணி அத்துடன் முடிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் வசிக்கும் சாலையின் தெற்கு பகுதியில் நடைபாதை அமைக்கப்பட்டது. மனுதாரர் வீட்டின் முன்புறம் (சாலையின் வடக்கு பகுதியில்) மனுதாரரின் ஆட்சேபனை காரணமாகவும் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படியும் நடைபாதை புதிதாக அமைக்கப்படவில்லை. மனுதாரருக்கு சென்னை பெருநகர மாநகராட்சி சட்ட விதிகளின்படி சாலையை ஆக்கிரமித்ததற்காக notice under section220 read with 222 of the CCM Act IV 1919–ன்படி மத்திய வடடார இணை ஆணையர் அவர்கள் மூலம் 14.09.2020 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டது. தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான தேர்தல் காரணமாகவும், கொரோனா பெருந்தொற்று நோய் 2வது அலையின் காரணமாக

கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிகளில் ஈடுபட்டிருப்பதால் ஆக்கிரமிப்பு இன்னும் அகற்றப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

7. இந்நிகழ்வு தொடர்பாக மீண்டும் 06.09.2021 அன்று மறு விசாரணைக்கு ஆஜராகுமாறு முறையீட்டு மனுதாரருக்கு 23.08.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

8. மனுதாரர் 06.09.2021 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தனது மனுவில் தெரிவித்துள்ள புகாரையே குறிப்பிட்டு தனது வாக்குமூலத்தை பின்னர் அனுப்புவதாக தெரிவித்தார். ஆனால் நாளது தேதிவரையில் சமர்ப்பிக்கவில்லை.

9. மாவட்ட வருவாய் அலுவலர் தனது 26.08.2021 நாளிட்ட அறிக்கையில் தனது 10.07.2021 அறிக்கையில் உள்ளதையே தெரிவித்து இறுதியில் தற்பொழுது கொரோனா 2ஆம் அலை ஓய்ந்திருப்பதால் ஆக்கிரமிப்பு அகற்ற போலீஸ் பாதுகாப்பு கேட்டு எம்.ஜி.ஆர். நகர் காவல்துறை ஆய்வாளர் சட்டம் மற்றும் ஒழுங்கு அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும் காவல்துறையினர் போலீஸ் பாதுகாப்பு வழங்கியவுடன் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்று தெரிவித்துள்ளார்.

10. முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, மண்டலம் 10ஐ சேர்ந்த உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம், மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர், மண்டலம் 10 அவர்களின் அறிக்கைகள் ஆகியன இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள அதே கோரிக்கைகள் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். W.P. No.13750 of 2020 & WMP.No. 17089 of 2020 தொடர்ந்துள்ளார். மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 07.10.2020 அன்று மேற்கண்ட வழக்கில் பின்வருமாறு ஆணை பிறப்பித்துள்ளது.

" (5) Though the petitioner/Party-in-person prayed for a larger relief, this Court, in the light of the above facts and circumstances and without going into the merits of the claim projected by the petitioner/Party-in-person. either in his representations/complaints or in this writ petition, directs respondents 2 and 3 to consider and dispose of the said representations/complaints on merits and in accordance with law and also in an objective manner, within a period of six weeks from the date of receipt of a copy of this order and communicate the decision taken to the petitioner/Party-in-person.

(6) The writ petition stands disposed of accordingly. No costs, Consequently, the connected miscellaneous petition is closed."

மேலும், இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் சென்னை பெருநகர மாநகராட்சி சாலையை ஆக்கிரமித்து கோயில் மற்றும் வேலி அமைத்துள்ளதால் சட்டவிதிகளின்படி சாலை ஆக்கிரமிப்புக்காக Notice under section 220 read with 222 of the Chennai City Municipal Corporation Act 1919 (T.N.Act IV of 1919) –ன்படி மத்திய வட்டார இணை ஆணையர் அவர்களால் தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதால் அதே கோரிக்கை தொடர்பாக இம்முறைமன்றத்தால் மீண்டும் விசாரிக்க வேண்டிய அவசியம் எழவில்லை. இருப்பினும் மனுதாரரால் சாலை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் அது தொடர்பான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு மண்டல அலுவலர், மண்டலம் 10–ஐ இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. ஆர்.வெங்கட்டராமன்,
த/பெ. ஆர். ராஜகோபால் (லேட்)
எண்.65/2019, ஆர்.வி.ஆர்.ஹவுஸ்
எண்.1,2, மற்றும் 3, திருமலை தெரு,
ஜெய்பாலாஜி நகர், சென்னை – 600 078.

மண்டல அலுவலர்,
மண்டலம் 10
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்.117, ஆற்காடு சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

உதவி செயற்பொறியாளர்,
கோட்டம் 28/137
பெருநகர சென்னை மாநகராட்சி
கே.கே.நகர்,
சென்னை – 600 078.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

Tamil Nadu State Local Bodies Ombudsman
Chennai-600 032

03/12/21

செயலாளர்